**Industry Excellence award to TNPL**

Institution of Engineers - India (IEI) is the largest multi-disciplinary professional body of engineers. IEI has presently a membership strength of 2 lakh engineers and 2.5 lakh engineering students.

The IEI Industry Excellence Award has been instituted to acknowledge and recognize industry leaders for their innovation, excellence in engineering operations and services and for ensuring growth of the business in a competitive environment. The idea is also to aimed at setting bench-marks for emerging industries with regard to quality, productivity, innovation and Corporate Social Responsibilty.

Realizing that such industries can provide encouragement to a large number of other industries in the country, the IEI Council conducted the IEI Industry Excellence Award every year. This year award ceremony has been planned as a part of Centenary Celebration of IEI.

There are two major categories of the awards- Engineering Manufacturing and Processing and Engineering Services and Consultancy.

On behalf of TNPL, Dr.S.Subramanian, DGM (R & D and QC), Team Leader and Mr. T. Vijayakumar, Senior Manager (Laboratory) Team Member submitted the required questionnaire for the above award in the category of Engineering Manufacturing and Processing.

The award winners are subject to two round of selection. Initially application are scrutinized by “Committee”. The short listed companies are further scrutinized by “Jury”. The Committee and Jury are comprised of Council Members of IEI . The parameters consider for evaluation are Organizational Profile, Financial Performance, Raw material and Environmental Performance, Technical Performance, Research and Development Initiatives, Safely Quality Practices, Corporate Governance and Corporate Social Responsibilities.

Various sectors like, Aeronautical, Automotives, Electronics, Carbon, Metal, Minerals, Motor, Power, Paper etc are the participant for the Award. In Pulp and Paper sector only TNPL was selected for the Industry Excellence Award due to adoption of Circular Economy Model in TNPL.

TNPL is one among the 11 companies awarded with both shield and certificate for "Industry Excellence Award" during IEI Centenary Industry Excellence Award ceremony, New Delhi on 5 November 2019.

The award was presented to TNPL by Shri Nitin Gadkari, Honorable Minister of Road Transport and Highways and Micro and Medium Enterprises, Government of India.

TNPL is also felicitated by Prof (Dr) K K Aggarwal, Chairman, National Board of Accreditation (NBA) and Dr.T.M Gunaraja, President IEI.

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலைக்கு "தொழில் நுட்ப சிறப்பு" என்ற விருது

கல்கத்தாவில் இயங்கி வரும் இஞ்ஜினியர்களின் நிறுவனம் (இந்தியா) – "**இநிஇ**" என்பது பொறியாளர்களின் மிகப்பெரிய தொழில்முறை அமைப்பாகும் . தற்போது 2 லட்சம் பொறியாளர்கள் மற்றும் 2.5 லட்சம் பொறியியல் மாணவர்களின் உறுப்பினர் பலத்தைக் கொண்டுள்ளது. இந்திய தொழில் துறையில், தொழில் முறைப் புதுமை, பொறியியல் செயல்பாடுகள் மற்றும் சேவைகளில் சிறந்து விளங்குவதற்கும் போட்டித் தன்மையில் சிறப்பாக செயல்படுவதற்கான அவற்றின் திறமைக்கு அங்கீகாரம் அளிக்க "தொழில் நுட்ப சிறப்பு" என்ற விருதினை ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவில் தொழில் துறையால் உருவாக்கப்பட்ட தரம், உற்பத்தி திறன், புதுமை, பாதுகாப்பு மற்றும் பெறுநிறுவன சமூக பொறுப்புணர்வு ஆகியவற்றை இந்த விருது உள்ளடக்கியுள்ளன.

இந்த தொழில்கள் நாட்டின் ஏராளமான பிற தொழில்களுக்கு ஊக்கத்தை அளிக்க ஒவ்வொரு ஆண்டும் "**இநிஇ**", இந்த தொழில் நுட்ப சிறப்பு விருதை நடத்துகின்றது. இந்த ஆண்டு தனது நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்த விருது வழங்கும் விழா திட்டமிடப்பட்டது.

இந்த விருதுகளில் இரண்டு பிரிவுகள் உள்ளது. 1. பொறியியல் உற்பத்தி மற்றம் செயலாக்கம் 2. பொறியியல் சேவைகள் மற்றும் ஆலோசனைகள்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் முனைவர் செ. சுப்பிரமணியம் துணை பொது மேலாளர் (ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் தர கட்டுபாடு) அணித்தலைவர் மற்றும் திரு. து விஜயகுமார், முதுநிலை மேலாளர் (ஆய்வகம்) குழு உறுப்பினர் ஆகியோர் மேற்கூறிய விருதுக்கு "பொறியியல் உற்பத்தி மற்றம் செயலாக்கம்" பிரிவில் தேவையான கேள்விகளை சமர்ப்பித்தனர்.

இந்த விருதினை வெல்ல நிறுவனங்கள் இரண்டு சுற்று தேர்வுக்கு உட்படுத்தப்படுவார்கள். முதலில் விண்ணப்பங்கள் "குழு" மூலம் ஆராயப்படுகிறது. பிறகு குழுவினரால் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் "ஜீரியின்" மூலம் ஆராயப்படுகின்றன. "**இநிஇ**" நிறுவனத்தில் உள்ள கவுன்சில் உறுப்பினர்கள் மேற்கூறிய தேர்வுகளை செய்கின்றனர்.

வானூர்தி, வாகன ஊர்தி, மின்னணு கார்பன், உலோகம், கனிமங்கள், சக்தி, காகிதம் போன்ற பல்வேறு துறைகள் இந்த விருதுக்கு பங்கேற்கின்றன. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு ‘‘வட்ட பொருளாதார முறை ’’யை பின்பற்றியதால் இந்த விருது வழங்கப்பட்டது.

நவம்பர் 5, 2019 அன்று புதுதில்லியில் உள்ள ‘‘**இநிஇ**’’ நடத்திய நூற்றாண்டு தொழில் சிறப்பு விருது வழங்கும் விழாவின் போது தொழில் நுட்ப விருதுக்கான கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்ட 11 நிறுவனங்களில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஒன்றாகும்.

இந்த விருதை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள். மைக்ரோ மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சர் மாண்புமிகு நிதின்கட்காரி வழங்கியுள்ளார்.

தேசிய அங்கீகார வாரியத்தின் தலைவர் பேராசிரியர் டாக்டர் கே. கே. அகர்வால் மற்றும் “**இநிஇ**” தலைவர் டாக்டர் டி.எம் குணராஜா ஆகியோர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வாழ்த்து கூறினர்.